www.tamilarangam.net


# ஈழச்செய்தி

EELAM NEWS

EPIC

(ESTD IN 1980) POST BAG 5551, MADRAS-600094. INDIA.

கடிதம் : 25 டிசம்பர் 1984




# உலக சமாதானப் புறா ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது ஏகாதிபத்தியத்தால் மனிதகுலத்துக்கு இழைக்கப்பட்டுள்ள மன்னிக்க முடியாத துரோகச்செயல்!

சர்வதேச சமாதான இயக்கத்தின் நம்பிக்கைக்கும், அன்புக்கும் உரிய உலக சமாதானப் புறா வீழ்த்தப்பட்டது.

உலக அரங்கில் வளர்ந்துவரும் சோசலிசத்திற்கும், வலுவிழந்துவரும் முதலாளித்துவத்திற்கும் நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் சோசலிச உலகின் பலம் அதிகரித்து வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள், தேசிய விடுதலை இயக்கங்கள் சமாதானத்தில் உண்மையான அக்கறையுடையோர் அனைவரும் உலக சோசலிசத்தின் பின்னால் அணி திரண்டு வருகிறார்கள்.

சோவியத் யூனியனுடனும், ஏனைய சோசலிச நாடுகளுடனும் சுதந்திர இந்தியாவின் நட்புறவுக்கான அடித்தளம் நேரு காலத்தில் இடப்பட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமுக்கு ஆரோக்கியமான, பரஸ்பர சமத்துவத்தின் அடிப்படையிலான இந்த நட்புறவு இந்திரா காந்தியின் காலகட்டத்தில் மேலும் பயன் உடையதாக மேம்பாடடைந்தது. இந்துமாக் கடலை யுத்த சூனிய பிராந்தியமாக்கும் சர்வதேச சமாதான இயக்கத்தினதும், அணிசேரா நாடுகளதும், கொள்கையை ஏகாதிபத்திய போர் வெறியர்கள் நிராகரித்துள்ளனர். இந்துமாக் கடலில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயன்று வருகின்றனர்.


இந்துமாக் கடலில் தமது போர் கப்பல்களை அனுப்பி வைத்துள்ள ஏகாதிபத்திய ராணுவ வெறி வாதிகள் பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், போன்ற நாடுகளையும்


ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH : EPIC B. M. Box 1738, LONDON WCI N 3XX


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்தியத்துக்கு எதிரான,
உலக சமாதானத்திற்கான
சோவியத்—இந்திய இணைவில்
தோழர் பிரஸ்நேவ்—திருமதி காந்தி

ராணுவ மயமாக்கி அவற்றைத்தமதுயுத்தவிளை நில மாக்கியுள்ளனர். இந்துமாக் கடலில் ஏகாதிபத்திய போர் வெறியர்களின் மேலாதிக்க நோக்கங்களுக்கும் ராணுவ வெறி வாத சூழ்ச்சிகளுக்கும், இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கையும், சோவியத் யூனியனுடன் ஆன பரஸ்பர பாதுகாப்பு உறவும் பெருந்தடையாக உள்ளன.

ஏகாதிபத்தியத்திற்கும், சுரண்டல் உறவுகளுக்கும் எதிரான ஈழ விடுதலை போராட்டத்தை ஒடுக்க, கொல்லி எறிய சிறீலங்கா பாஸிஸ்டுகளுக்கு உதவிட இலங்கைத் தீவில் நுழைந்துள்ளது அமெரிக்க ஏகாதிபத்தியம். அங்கிருந்தவாறு ஏகாதிபத்தியமும் அதன் ஏவல் நாய்களும், இந்திய துணைக் கண்டத்துக்குள்ளும் ஊடுறுவியுள்ளன. சதி, பிளவு வேலைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளன.

சிங்கள மக்களிடம் இன வெறியைத் தூண்டி ஈழ மக்களைப் படுகொலை செய்யும் சிறீலங்கா பாஸிஸ்ட்டுகளுக்கு எதிராக, இந்தியா குரல் எழுப்பும் போது, ''இந்தியாவால் சிறீலங்காவுக்கு ஆபத்து'' என்ற பிரச்சாரத்தை ஏகாதிபத்தியம் தூண்டிவிட்டிருக்கிறது. இதன் மூலம் சிறீலங்காவை பாதுகாப்பது என்ற காரணம் காட்டி சிறீலங்கா மக்களின் எதிர்ப்பின்றி இலங்கைத் தீவில் நிரந்தரமாக அமெரிக்க படைகள் தங்கியிருக்க ஏதுவாக இருக்கு மென்று ஏகாதிபத்திய போர்த் தந்திரிகள் சூழ்ச்சி செய்கின்றனர்.

இதனால் இந்திய எதிர்ப்பை சிறீலங்கா பாஸிஸ்டுகளும் தீவிரமாக முடுக்கி விட்டிருக்கின்றனர். சிறீலங்காவில் ஈழ மக்களுக்கு எதிரான சிங்கள பேரின வாதத்தைத் தூண்டி புகுந்து கொண்டுள்ள ஏகாதிபத்தியம் இந்தியாவிற்குள்ளும், இன, மத குரோதங்களை ஊக்குவித்து சதி, பிளவு வேலைகளை அரங்கேற்றி வருகிறது.

சோவியத் யூனியனின் செய்தி நிறுவனமான ''டாஸ்'' விமர்சகர் இந்திரா காந்தியின் படுகொலைக்கும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனத்திற்கும் தொடர்பு உண்டு என்று கூறியது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், அமெரிக்கா இதை மறுத்துள்ளது. மனித குலத்துக்கு எதிரான படுகொலை நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடுவதும், பின் மறுப்புகள் மூலம் தப்பித்துக் கொள்ள முற்படுவதும் ஏகாதிபத்தியத்திற்கு கை வந்த கலையாகும்.

உலக சோசலிச முகாம் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் தேசிய விடுதலை இயக்கங்கள் மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகந் தழுவிய பயங்கர வாத நடவடிக்கைகளின் தொடர் விளைவு தான் இந்திரா காந்தி மீது கூலிக் கொலையாளிகள் மூலம் படுகொலை நடவடிக்கையை ஏவி விட்டு உள்ளது. சர்வதேச சமாதான இயக்கமும் சகோதர சோசலிச நாட்டு மக்களும் தேச விடுதலை இயக்கங்களும் மிகவும் துணிச்சலான ஓர் உற்ற நண்பரை இழந்து விட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாம் வலுவடைந்தும் சர்வதேச மெங்கும் சமாதானத்திற்கான இயக்கம் விரிவடைந்தும் வருகின்ற இன்றைய காலகட்டத்தில் இந்திரா காந்தியவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.

ஜனநாயகம், சோசலிசம், சமாதானம் என்னும் உயரிய இலட்சியங்களுக்காக, சிறீலங்கா பாஸிஸ்டுக் களையும், அவர்களது எஜமானர்களையும் எதிர்த்து வீரமுடன் போராடும் ஈழ மக்கள் தமது உற்ற நண்பரை இழந்து நிற்கின்றனர்.

இந்திரா காந்தி தலைமையேற்ற கூட்டு சேரா நாடுகளின் கொள்கைகளுக்காகவும், ஏகாதிபத்திய போர் வெறியருக்கு எதிராகவும் உறுதியுடன் போராடுவதே திருமதி காந்தி அவர்களுக்கு நம் அஞ்சலியாகும்.

புதிய இந்திய பிரதமர் திரு ராஜீவ் காந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியுடன் செயல்பட்டு, உலக சோசலிச நாடுகளுடனும், தேச விடுதலை இயக்கங்களுடனும் இந்தியாவின் நட்புறவை மேலும் வலுவாக்குவார் என்று நம்புகிறோம்.

**ஏகாதிபத்திய போர் வெறியர்கள் ஒழிக! உலக சமாதானம் நீடூழி வாழ்க!**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தவறான போக்கு தொடர்கிறது.

''தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்'' அடிக்கடி ஒற்றுமை பற்றி அறிக்கை விடுகிறது. இதன் தலைவர் உமா மகேஸ்வரன் ''நாமும் ஐக்கியத்துக்கு தயார் தான்'' என்று கூறிக் கொள்கிறார்.

ஆனால் இவர்களது நடைமுறைகள் இவர்கள் கூறும் எந்தக் கருத்துடனும் உடன்பாடு கொண்டதாக இருப்பது கிடையாது.

ஒரு தனி நபர் அல்லது இயக்கம் என்ன முழக்கங்களை எழுப்புகிறது என்பதைக் கொண்டு அந்த தனி நபரையோ அல்லது இயக்கத்தையோ யாரும் மதிப்பிட முடியாது.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) சொல்வது ஒன்று, அது செயலில் அமுல்படுத்துவது வேறொன்றாகவே இது வரை இருந்து வருகிறது.

அண்மையில் இவர்கள் நடத்தும் ''தமிழீழத்தின் குரல்'' ஒலி பரப்பு சேவையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீது உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்டு ஈழ மக்களை குழப்ப முயன்றுள்ளனர். ஏகாதிபத்தியங்களதும், பாசிஸ்டுக்களதும் தகவல் தொடர்புச் சாதனங்கள் விடுதலை இயக்கங்கள் பற்றிய செய்திகளை திரிபுபடுத்துவது போலவே, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் நடந்து கொள்கிறது.

சிறீலங்கா அரசு காவி உடையணிந்த இன வெறியர்கள் சிலரை புத்த பிக்குகள் என்ற போர்வையில் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. இந்த இன வெறியர்கள் விடுதலைப் போராளிகளை சந்திக்க வந்துள்ளதாக கூறினர். இந்தியாவில் ஈழ விடுதலை இயக்கங்களின் தலைமைப் பீடம் எதுவும் இல்லை எனவும், இவர்களை சந்திக்க முடியாது எனவும் ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு அறிவித்தது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய விடுதலை அமைப்புகளே இவ்வாறு தெரிவித்தன. கூட்டமைப்பின் அறிக்கை இந்தியாவிலும், ஈழத்திலும் உள்ள பத்திரிகைகளில் வெளி வந்தது.

ஆனால் உண்மைக்கு மாறாக, ஈழ மக்களிடையே, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்குள்ள அடித் தளத்தை இல்லாது செய்யும் தந்திரத்தோடு ''தமிழீழத்தின் குரல்'' நாடகமாடியது. ''சென்னையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழர்கள் இருவர் புத்த பிட்சுகளை சந்தித்ததாக'' பொய்யான புரட்டல் செய்தியை வெளியிட்டது.

### சோவியத் மீது சேறுபூசும் முயற்சி

அண்மையில் சிறீலங்கா அரசு சோவியத் யூனியனின் அதிகாரிகளையும், பல்கேரிய நாட்டின் அதிகாரிகளையும் வெளியேற்றி உள்ளது.

சோவியத் யூனியனின் ஏரோபுளோட், பல்கேரியாவின் பல்கன் என்னும் விமான சேவை நிறுவனங்களது அதிகாரிகளே சிறீலங்கா அரசால் வெளியேற்றப்பட்டவர்களாவர்.

சோவியத் யூனியன் மீது தினந் தோறும் உண்மைக்கு மாறான பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ள, ஏகாதிபத்திய ஆளும் வட்டாரங்களும் அவர்களது சிந்தாந்தவாதிகளும் உலக சோசலிச முகாமை குழிபறிக்கும் திட்டத்தோடு செயல்படுகின்றனர். உண்மையில் சோவியத் எதிர்ப்பு மூலம் பெரும் இலாபமடைவது ஏகாதிபத்திய ஆளும் வட்டாரங்கள் தான்.

உலக விடுதலை இயக்கங்களுக்கும், பாட்டாளி வர்க்க சக்திகளுக்கும் சோவியத் யூனியன் தனது சர்வதேசிய உதவியை வழங்கும் போது ''ஆக்கிரமிப்பு'' என கூச்சலிடும் ஏகாதிபத்தியங்களும், அதன் ஏவல் நாய்களும் செய்து வரும் வேலையைத் தான் சிறீலங்கா அரசும் தொடர்கிறது.

சோவியத் யூனியன் இல்லா விட்டால் தமது ஆக்கிரமிப்புக் கனவுகளை நிறைவேற்றலாம் எனத் துடிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசுவாச அடிமையான சிறீலங்கா அரசு சோவியத் மீதும், பல்கேரியா மீதும் அவதூறான பிரச்சாரத்தை நடத்தி உள்ளது. இஸ்ரேலிய மொசாட், தென்னாபிரிக்க இனவெறியர்கள், பிரிட்டிஷ் கூலிப் படை, அமெரிக்க சி. ஐ. ஏ. கொலைக் கும்பல் போன்ற தனது நண்பர்களை இனம் கண்டு வரவழைத்துள்ள சிறீலங்கா தனது எதிரிகளை, மனித குலத்தின் பாதுகாவலர்களை வெளியேற்றுகிறது.

ஒடுக்கப்படும் மக்களின் உண்மையான நண்பன் சோவியத் யூனியன் என்பதால், ஒடுக்கும் கும்பல்கள் சோவியத் மீது ஆத்திரம் அடைவதில் ஆச்சரியம் என்ன ?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீசினர். இதுவரை கிடைத்த தகவல்களின் படி 40 சிறீலங்கா கூலிப்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது. இந்த இராணுவ நடவடிக்கை எதிரிப்படைகள் மத்தியில் குழப்பத்தையும், அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

## இனவெறி ஓநாய்களின் போர்வெறி ஓலங்கள் !

## ஈழம் வேட்டைக்காடாகிறது. கொலைப் பட்டாளங்கள் குவிகின்றன !

டிசம்பர் 1: ''ஈழப் போராளிகளுடன் யுத்தம் நடத்தத் தயார்'' இவ்வாறு சிறீலங்காவின் இனவெறி ஓநாய் அத்துலத்முதலி ஊளையிட்டிருக்கிறது. இதுவரை காலமும் பிரகடனப்படுத்தாத யுத்தத்தை ஈழம்மீதும், ஈழ மக்கள்மீதும் கட்டவிழித்துவிட்ட பாசிஸ்டுக்கள் இன்று பகிரங்கமாகவே யுத்தப்பிரகடனம் செய்துள்ளனர். ''ஈழப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது'' என்னும் போலிப் போர்வைக்குள் இருந்து பாசிச அரசு அகோரத்தனத்துடன், இரத்தவெறிகொண்டு வெளிவந்துள்ளது. போர்வெறியுடன் ஊளையிடுகிறது.

மன்னார் முதல் முல்லைத்தீவு வரை உள்ள கடற்கரை பிராந்தியங்கள் மனித நடமாட்டம் இல்லாத சூன்ய பிர்தேசமாக ஆக்கிரமிப்பாளனரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஈழம் எங்கும் காலை எட்டுமணிக்கு முன்பும் மாலை 4 மணிக்கு பின்பும் மனித நடமாட்டம் தடுக்கப்பட்டு பாசிச பட்டாளங்கள் வீடுபுகுந்து அப்பாவி மக்களை கொன்று குவிக்கின்றன.

பாசிசத்தின் அடிப்படை குணாம்சமான இனவெறி விசுவரூபமெடுத்துள்ளது. சகல சிங்களவரும் தமிழருடன் போர்புரிய ஆயுதம் ஏந்த வேண்டும் என்று சிறீலங்கா பாசிஸ்டுக்கள் பிரச்சாரம் செய்கின்றனர்.

''இந்தியா படை எடுக்கப்போகிறது'' என்று பூச்சாண்டி காட்டி சிங்கள மக்கள் மத்தியில் பாசிசத்தின் அடித்தளங்கள் வலுவாக்கப்படுகின்றன.

ஈழ மக்களையும், அவர்களது இயக்கங்களையும் எதிர்நோக்கும் உடனடிக்கடமை ஒன்றுபடுவதும், உறுதியாகப் போராடுவதும் மட்டுமே.

எதிரியின் ஆத்திரமூட்டல்களுக்கிடையிலும் மிகவும் நிதானத்துடன் அனைத்து போராளிகளது துப்பாக்கிகள் விவேகமாக பயன்படுத்தபடவேண்டிய வேளையிது.

ஈழமக்களுக்கு மிகவும் கட்டுப்பாட்டுடன் தலைமை அளித்து, எதிரியின் வியூகங்களை தகர்த்தெறிய சகல இயக்கங்களும் ஐக்கியப்பட்டு செயல்படவேண்டும்.

ஏற்கனவே அமைந்துள்ள **ஈழவிடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு** ஏனைய இயக்கங்களையும் இணைத்துக் கொள்ள எடுத்துவரும் முயற்சி வெற்றிபெறும் என நம்புகிறோம்.

**எத்தகுதடைகள் வரினும், கொடுமைகள் குவிந்தபோதும்**
**போராட்டம் தொடரும், புதிய ஈழம் மலரும்!**

## இயக்கங்களிடையே சிண்டு முடியும் சிறீலங்கா அரசு

சாவகச்சேரி காவல் நிலையம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தால் தகர்க்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைக்குத் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உரிமை கோரியது. ஆனால் சிறீலங்கா அரசு ''தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்'' இயக்கமும் இந்த நடவடிக்கைக்கு உரிமை கோருவதாக உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டது. சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வானொலி நிலையம் அடிக்கடி இச் செய்தியை ஒலி பரப்பியது. ஆனால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சந்தர்ப்பத்திலும் சாவகச்சேரி காவல்நிலையத் தகர்ப்புக்கு உரிமை கோர வில்லை. இயக்கங்களுக்கிடையே சிண்டு முடிந்து, தம்மைப் பலப்படுத்திக் கொள்ள சிறீலங்கா பாசிஸ்டுக்கள் செய்த முயற்சி முறியடிக்கப்பட்டது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் குழு சாவகச்சேரி காவல் நிலையம் மீதான இராணுவ நடவடிக்கைக்குத் தாம் உரிமை கோரவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறீலங்காவில் ஈழ வாலிபர்கள் கைது !

நவ. 26. சிறீலங்காவிலும் பாசிச அரசுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் அண்மையில் இடம் பெற்றன. இதனால் சிறீலங்காவில் உள்ள தமிழர்களை முற்றாக வெளியேற்ற பாசிச அரசு முயற்சி எடுக்கிறது.

சிறீலங்காவில் நூற்றுக்கு மேற்பட்ட ஈழ வாலிபர்கள் "பயங்கர வாதிகள்" என்ற சந்தேகத்தின் பேரில் வதை முகாம்களுக்கு இழுத்துச் செல்லப் பட்டுள்ளனர். சிங்கள மக்கள் மத்தியில் இன்வாதத்தை மேலும் மேலும் வளர்க்க சிறீலங்கா அரசு அக்கறை காட்டுகிறது.

## ஈழ இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்படுவதை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் - தோழர் எம். கல்யாணசுந்தரம்.

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் கைது செய்யப்படும் தமிழ்இளைஞர்கள், கச்சத்தீவு அருகே இந்தியக் கடற் பகுதியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன் பிடி படகுகளில் வலுக் கட்டாயமாக ஏற்றப்பட்டு ஆழ் கடலுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கே கொலை செய்யப் படுகின்றார்கள். பின்னர் அவர்கள் இந்தியாவிலிருந்து இந்தப் படகுகளில் கள்ளத்தனமாக வந்ததாக அபாண்டமாகப் பழி சுமத்தப்படுகிறார்கள்.

ஈழத் தமிழர்களது உரிமைகளுக்காகப் போராடும் இந்த இளைஞர்கள் மீது வீண் பழி சுமத்தி படு கொலை செய்வதற்காக சிறீலங்கா அரசு அத்தகைய தந்திரங்களை கடைப் பிடிக்கின்றது.

கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறீலங்கா கடற்படை நவீன ஆயுதங்களுடன் நடமாடுகின்றது இதனால் அப் பிராந்தியத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. பாக், ஜல சந்திப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்தவும் சிறீலங்கா அரசின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு முடிவு கட்டவும் மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தோழர் கல்யாணசுந்தரம், எம். பி. பத்திரிகைகளிற்கு விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிறீலங்கா அரசு மீது அரபு நாடுகள் அதிருப்தி

சிறீலங்கா அரசு இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளதானது அரபு நாடுகள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அரபு நாடுகள் காட்டும் அதிருப்தி சிறீலங்கா அரசை பொருளா தார ரீதியாக பெரும் தாக்கத்திகு உள்ளாக்க விருப்பதுடன் சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை பெரும் கலக்கத்திற்குள்ளாக்கியுள்ளது.

இலங்கை ( சிறீலங்கா + ஈழம் ) யைச் சேர்ந்தவர்கள் அரபு நாடுகளில் எளிதில் வேலை பெறக் கூடிய தாக இருந்தமையால் கடந்த ஆண்டு சுமார் 5 லட்சம்பேர் வேலை பார்த்து வந்தனர். இதன் மூலம் சிறீலங்கா அரசு 600 கோடி ரூபாவை அந்நியச் செலாவணியாகப் பெற்று வந்தது.

ஆனால் தற்போது இலங்கை ( சிறீலங்கா + ஈழம் ) யைச் சேர்ந்தவர்களுக்கு விசா அளிப்பதை குவைத் அரசு நிறுத்தி வைத்துள்ளதாக தெரிய வருகிறது. இவ்வாறு வேறும் சில அரபு நாடுகள் விசா மறுத் துள்ளதாகத் தெரிகிறது. அத்துடன் இஸ்ரேலுடன் உறவைத் துண்டிக்கா விடில் பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்துவது பற்றியும் அரபு நாடுகள் யோசித்து வருகின்றன.

## ரீகன் கொடும்பாவி எரிப்பு

## இந்திரா காந்தி படுகொலையின் சூத்திரதாரிகள் யார் ?

தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கட்சிகளும் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலிலிருந்து சீரணி அரங்கு வரையான நீண்ட ஊர்வலமொன்றை நடத்தினர். இந்திரா காந்தி மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நடத்த இந்த ஊர்வலத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கலந்து கொண்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர், ரீகன், சி. ஐ. ஏ. கொடும்பாவிகளை ஊர்வலத்தில் எடுத்துச் சென்றனர். ஊர்வலத்தினர் ரீகன் கொடும் பாவிக்கு செருப்பு மாலை அணிவித்தனர். சேரணி அரங்கில் இக் கொடும் பாவியை எரித்த போது அங்கிருந்த மக்கள் உணர்ச்சியுடன் "இந்திரா காந்தி நீடுழி வாழ்க! ரீகன் ஒழிக! சி. ஐ. ஏ. ஒழிக! "அமெரிக்கா பாகிஸ்தான் கூட்டுச் சதியை முறியடிப்போம்" "இந்திய சோவியத், ஈழ நட்புறவு ஓங்குக" ஜே. ஆர். ரீகன், ஜியா கூட்டுச் சதியினர் ஒழிக! போன்ற கோஷங்களை எழுப்பினர்.

## ஆக்கிரமிப்பாளர் மீது போராளிகளின் இராணுவ நடவடிக்கை! வெலிக்கடை படுகொலையின் சூத்திரதாரிகள் கொல்லப்பட்டனர்!

நவ. 30: ஈழத்தின் எல்லைப் புறங்களில் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

இஸ்ரேலிய சியோனிஸ்டுகள் பாலஸ்தீனத்தில் திட்டமிட்டு நடத்திய ஆக்கிரமிப்புப் பாணியில் சிங்கள சோவனிஸ்டுக்களும் ஈழ மண்ணில் ஆக்கிரமிப்பு நடத்துகின்றனர்.

ஈழ மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்தெடுத்து விடுவதன் மூலம் ஈழ மக்களுக்கெதிரான அழித்தொழிப்பு நடவடிக்கையைச் சுலபமாக்கப் பாசிச அரசு திட்டமிட்டுள்ளது.

தெரிந்தெடுக்கப்பட்ட இனவெறிக் குண்டர்களை ஈழ எல்லைப் புறங்களில் குடியேற்றி அவர்களுக்குத் தனது கூலிப்படைகளின் பாதுகாப்பையும் பாசிச அரசு வழங்கியுள்ளது.

இக்குடியேற்றங்களில் உள்ள இனவெறியருக்கு நவீன ஆயுதங்களையும் பாசிச அரசு பரிசளித்துள்ளது. இக் குடியேற்றங்களைப் பாதுகாக்க இராணுவ முகாம்களும் நிரந்தரமாகவே நிறுவப்பட்டன.

பயங்கரமான சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் "புனர் வாழ்வு" அளிப்பது என்னும் பெயரில் ஈழ எல்லைப் புறங்களில் பாசிச அரசு குடியேற்றியது.

சிறீலங்கா வெலிக்கடை வதை முகாமில் ஈழப் போராளிகளையும், தமிழ்க் கைதிகளையும் படுகொலை செய்த இனவெறி மிருகங்கள் முல்லைத்தீவு மற்றும் வவுனியா எல்லைப் புறங்களில் குடியேற்றப்பட்டன.

"கென்பண்ணை" "டாலர் பண்ணை" ஆகியவற்றில் குடியிருந்த மலையகத் தமிழ் மக்களை விரட்டி, அடித்து விட்டு சிங்கள இனவெறியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். மலையக மக்களை நடுவீதிக்கு விரட்டி விட்டுக் கூலிக்குண்டர்கள், பண்ணைகளில் குடியேறினர்.

மலையக மண்ணில் இனவெறித் தீயில் விறகாய் எரிந்து, உயிர் வாழ்வதற்கான உரிமையே மறுக்கப் பட்ட மலையகத் தமிழர்களை விரட்டி விட்டுக் குடியேறிய கொலைக் குற்றவாளிகளான ஆக்கிரமிப்பாளர்கள் மீதுதான் ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்" இயக்கமே இந்த பயனுள்ளதும், போற்றத்தக்கதுமான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக அறிகிறோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கையில் 80 பேரினவாதக் காடையர்கள் கொல்லப்பட்டார்கள் என்று எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பயங்கரவாதக் கும்பலிடமிருந்து, பயங்கர ஆயுதங்களையும் போராளிகள் பறிமுதல் செய்ததாக எமக்குச் செய்தி கிடைத்துள்ளது.

ஆனால் தனது கூலிக்குண்டர்களை இழந்ததால் அதிர்ச்சியடைந்துள்ள சிறீலங்கா அரசு தவறான செய்திகளைப் பரப்பி வருகிறது.

அப்பாவி மக்களைப் போராளிகள் தாக்கியதாக ஒப்பாரி வைக்கிறது. தனது பட்டாளங்கள் 20 போராளிகளைக் கொன்றுவிட்டனர் எனக் கொக்கரிக்கிறது. ஆனால் எதிரிப்படைகளால் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட போராளிகள் எவரும் கொல்லப்படவில்லை.

சாதாரண தமிழ் மக்கள் முப்பதுக்கும் மேற்பட்டோர் கொலைப் பட்டாளங்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சகல விடுதலை அமைப்புக்களும் மக்களைப் பாதுகாப்பதில் உறுதியுடன் செயல்படுவதால் பாசிச படைகள் தரை மூலம் நடத்திய தாக்குதல்களை இப்போது வான் வழி ஹெலிகாப்டர் மூலம் மேற்கொள்கின்றன.

சாதாரண சிங்கள மக்கள் மீது ஈழ மக்களுக்கோ விடுதலை அமைப்புகளுக்கோ எவ்விதமான குரோதமும் கிடையாது. மக்களை நேசித்து மக்களுக்காகப் போராடும் ஈழ விடுதலைப் போராளிகள் சாதாரண சிங்கள மக்களைக் கொன்று குவிப்பதாக மக்கள் விரோதப் பாசிச அரசு செய்யும் பிரச்சாரம் உண்மைக்கு மாறானது.

ஈழ விடுதலை என்பது சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல; அவர்களின் அடிமைத்தனம் அகல்வதற்கும் ஈழம் விடுதலை பெறுவதன் மூலமே வழிபிறக்கும்.

சிங்கள முற்போக்கு, ஜனநாயக சக்திகளுடன் பரஸ்பர உறவை விரும்பும் ஈழ விடுதலை அமைப்புக்கள் சிறீலங்கா அரசையும், அதன் மக்கள் விரோத, பாசிச போக்குக்குத் துணை புரியும் சக்திகளையும் உறுதியுடன், விடாப்பிடியாக எதிர்த்துப் போராடுவது உறுதி.

## இந்தியா கடும் ஆட்சேபம்

## கொலைபாதக அரசின் கையாலாகாத்தனம் !

''இந்தியா படை எடுக்கப் போகிறது'' என்று சிறீலங்கா கொலை பாதக அரசு பூச்சாண்டி காட்டி வருகிறது. சிறீலங்கா அரசின் அவதூறான பிரச்சாரத்தை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி திட்டவட்டமாக மறுத்துள்ளார். இலங்கைத் தீவில் ஈழ மக்கள் துன்புறுத்தப்படுவதற்கு இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 18 படகுகளில் வந்த புரட்சிவாதிகளை விரட்டி விட்டதாக இனவெறி அரசு கதை விடுகிறது. இதில் எவ்வித உண்மையும் கிடையாது. இதுவரை சாதாரண தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கானோரை கொன்று குவித்துள்ள இரத்த காட்டேரிகள் ''பயங்கரவாதிகளை'' ஒழித்ததாக ஓலமிடுகின்றனர். ஈழப் புரட்சிவாதிகளை ஒழிக்க முடியாத கையாலாகாத்தனத்தை மூடிமறைக்கவும், அதிர்ச்சியும், குழப்பமும் அடைந்துள்ள கூலிப் படைகளை உஷார் படுத்தவும் பொய்யான தகவல்களை பரப்பி பாசிச அரசு சுயதிருப்தி அடைகிறது.

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

EPIC
Post Bag : 5551
MADRAS-600 094

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்